


# கவிதைத் தலைவர் நேரு

— சுரதா

பகாட
பதிப்பகம்







உவமைக் கவிஞர் சுரதா



சேகர் பதிப்பகம்

30, போஸ்ட் ஆபீஸ் தெரு, சென்னை-1.

சேகர் வெளியீடு : 56
முதற் பதிப்பு: டிசம்பர், 1966.
உரிமை பெற்றது.

108

13-11-'66இல் சென்னை வானொலியில்
இலக்கிய ஏடு என்ற பகுதியில்
ஒலிபரப்பப்பட்ட கவிதைகள்.

★

குழந்தைகள் தின விழா
காணிக்கை

அச்சிட்டோர்: ஐடியல் பிரிண்டர்ஸ், சென்னை-6.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர்

**கனம் எம். பக்தவத்சலம் அவர்கள்**

உவந்தளித்த

# அணிந்துரை

கவிஞர் சுரதா எளிய இனிய நடையில் புதிய பாணியிலே கவிதைகள் எழுதிவருகின்றவர். பொருத்தமான உவமைகளைக் கலந்து புதுமை நயம் கொழிக்க கவிதை மடல்களை ஆக்கி வருகின்றவர். அவர் நேருஜியைப் பற்றி இனிய எளிய நடையிலே கவிதை புனைந்து இருப்பது பாராட்டுதற்குரியது. நேருஜியைப் பற்றி நிறைய கவிதை நூல்கள் வெளிவர வேண்டும். அதற்கு இந்த நூல் ஊக்கம் அளித்து மேலும் பலரை நேருஜியைப் பற்றிக் கவிதை நூல்கள் எழுதத் தூண்டும் என்று நம்புகிறேன்.

நேருஜி எங்கும் நிறைந்தவராக, புதிய பாரதத்தின் தளபதியாகவும் தலைவராகவும் சுடர்விட்டுப் பிரகாசித்தவர். அவர் வாழ்க்கை வரலாறு இளைய சமுதாயத்திற்கும் வருங்கால சந்ததிகளுக்கும் ஒரு வழிகாட்டும் கலங்கரை விளக்கமாக அமைந்துள்ளது. அவருடைய லட்சியங்களையும் கொள்கைகளையும் மக்கள் படித்துப் பயனடைய வேண்டும். அவருடைய கொள்கைகளை வாழ்க்கையிலே அமுலாக்கி சமுதாயத்தைப் பலப்படுத்த வேண்டும். அவர் நமக்கு உருவாக்கித் தந்திருக்கும் சமதர்ம சமுதாயத்தை மேலும் மேலும் பலப்படுத்த வேண்டும்.

இத்துறையிலே மேலும் நாம் முன்னேற்றம் அடைய வேண்டும். அத்தகைய முயற்சிக்கு கவிதை நூல்கள் பெரிதும் துணையாக விளங்கும் என்று நம்புகிறேன். அந்த முறையில் இக் கவிதை நூலை வெளியிட்ட சேகர் பதிப்பகத்தை நான் பாராட்டுகிறேன். சேகர் பதிப்பகத்தார் சிறந்த தமிழ் நூல்களை வெளியிட்டு தமிழ்மொழிக்கு சேவை செய்து வருகிறார்கள். அவர்கள் தொண்டைப் பாராட்டுகிறேன்.

எம். பக்தவத்சலம்.

# பதிப்புரை

கவிஞர் சுரதா அவர்கள் முதன்முறையாக நேருஜியைப் பற்றிப் பாடியுள்ளார். அதுவும் புது முறை யாகப் பாடியுள்ளார். அவருக்கே உரிய புதுமை நோக்கும் ஆழ்ந்த சிந்தனையும் தோன்ற மிக அருமை யாக எழுதியுள்ளார்.

நேருஜியைப் பற்றி இதுவரை இவ்வளவு சிறப்பான கவிதை வெளிவரவில்லை என்பதால் மிகப் பூரிப்போடு இதனை வெளியிடுகின்றோம்.

இது உருவில் சிறிய நூல் ; உயர்வில் பெரிய நூல் !

நமது நாட்டில் நூல்கள் அழகாக, சிறப்பாக வெளிவர வேண்டும் என்று விரும்பியவர் நேருஜி. அவ் வகையில் சிறப்பாக நூல்களை வெளியிட்டுவரும் எமது பதிப்பகம், நேருஜியைப் பற்றி உயர்ந்த கருத்தமைந்த இக் கவிதை நூலையும் மிக அழகாக உருவாக்கி வெளி யிடுகின்றது.

மதிப்பிற்குரிய நமது தமிழக முதலமைச்சர் கனம் எம். பக்தவத்சலம் அவர்கள் இந் நூலுக்கு மிகச் சிறந்த அணிந்துறை வழங்கியுள்ளார். பல வேலைகளுக்கிடையே மிக விரைவாக அணிந்துரை வழங்கிய அவர்தம் பெருந் தன்மையைப் பெரிதும் போற்றுகிறோம். அப் பெரியார்க்கு எமது பணிவார்ந்த நன்றி.

மதிப்பிற்குரிய உவமைக் கவிஞர் சுரதா அவர் கட்கும், நூல் உருவாக்க இசைவு தந்த சென்னை வானொலி நிலையத்தார்க்கும் எமது நன்றியுரியது.

சொல்லழகும் பொருளழகும் கொண்ட கவிதைகளை கலையழகோடு கூட்டிச் சேர்த்து நூலாகப் படைக் கின்றோம். மாணவரும் பெரியோரும் படித்துச் சுவைத்து மகிழ வேண்டுகின்றோம்.

**சேகர் பதிப்பகத்தார்.**




சுவைகண்டார் இலக்கியத்தில் துணைகண்டார் திருமணத்தில்
தொடர்ந்து சுற்றிப்

புவிகண்டார் விந்தைபல இவர்கண்டார் வெளிநாட்டில்
புரட்சி கண்டார் ;

கவிகொண்ட உரைநடையில் கடிதங்கள் எழுதிநமைக்
கவர்ந்து கொண்டார்

எவர்கண்டும் காணாத மிகப்பெரிய கூட்டத்தை
இவரே கண்டார் !

பச்சிலைபோல் குளிர்ந்தவுளம் இவர்பெற்றார் பேரறிஞர்
பழக்கம் பெற்றார்

விச்சையெனும் கல்வியினை மேன்மேலும் ஆராய்ந்து
விளக்கம் பெற்றார்

உச்சியெனும் உயர்ந்தநிலை இவர்பெற்றார் உலகத்தில்
உயர்வு பெற்றார்

எச்சமெனும் புகழ்பெற்றார் இந்திரா காந்தியையும்
இனிது பெற்றார்!

தென்னகத்தில் ஓர்துறவி விழித்திருந்தார் பசித்திருந்தார்;
தீரர் நேரு

தன்னகத்தில் விழித்திருந்தார் சிறையதனில் பசித்திருந்தார்
தனித்தி ருந்தார்

முன்னொருசெந் தமிழ்ப்புலவர் பெரும்பசியால் பறந்திட்டார்
முகமும் சோர்ந்தார்

பன்மையிலே ஒருமைகண்ட பண்டிதரும் பலகாலம்
பறந்தார் வானில்!



'கங்கையிலே யமுனையிலே காவிரியின் கரையினிலே
கத்தித் தத்திப்

பொங்குகடல் மீதினிலே பொய்கையிலே வைகையிலே
புன்செய் நன்செய்

எங்கெங்கும் தெளித்திடுவீர் என்சாம்பல் தனை'யென்றே
எழுதி வைத்தார்!

இங்கிவர்போல் எழுதிவைத்தார் யாரேனும் நாட்டிலுண்டோ
இருந்தால் சொல்வீர்!


எவரைப்போல் இவரென்னும் பேச்சுக்கே இடமில்லை;
இந்த நாட்டில்

இவரைப்போல் எவரென்னும் பேச்சுக்கே இடமுண்டாம்!
இவர்க்கும் இங்கோர்

தவறுண்டாம் எனக்கூறின் முன்கோபம் ஒன்றேதான்
தவறும்; சின்ன

துவரையுளம் கொண்டோரே இக்குறையைப் பெருங்
குறையாய்ச்

சொல்வர் கண்டீர்!



# கும்மி

கண்ணில் கருணையும் கைகளில் நூலையும்
கல்வியை நெஞ்சிலும் வைத்தவராம்!

மண்ணில் அடியையும் விண்ணில் புகழையும்
மார்பில் மலரையும் வைத்தவராம்!



பொய்யழுக் கற்றநல் அந்தணராம்—புவி
போற்றும் புதுமை பொதிந்தவராம்

செய்யும் செயலில் சிறந்தவராம்—இந்தத்
தேசத்தை வாழ்விக்க வந்தவராம்!




குழந்தையை நேசிக்கும் பண்டிதராம்—பிள்ளைக்
குணங்களைப் பின்பற்றும் பண்டிதராம்

விழுந்த மழைத்துளி போன்றவராம்—புது
விஞ்ஞான ஏக்கம் நிறைந்தவராம்!



சாதி மதங்கள் கடந்தவராம்—அவர்
சத்திய கீர்த்தியைப் போன்றவராம்

நீதியும் நேர்மையும் கொண்டவராம்—பகை
நெஞ்சிலும் நட்பாய் நுழைந்தவராம்!



தூங்கிய வேங்கை விழித்ததுபோல்—புகைத்
தூக்கம் கலைந்த நெருப்பதுபோல்

ஆங்கில ஆட்சியை நின்றெதிர்த்தார்—அவர்
அப்போது வீரமாய் ஒன்றுரைத்தார்




வெந்தயம் போன்றதோர் புள்ளி நெருப்பினில்
வெற்றிலை வீழ்ந்தால் கருகிடுமோ?

எந்தச் சிறையி லெனையடைத் தாலுமென்
எண்ணங்கள் பொன்போல் உருகிடுமோ?




‘ஆலையும் நற்கல்விச் சாலையு மேநமக்
காலய மாகு’மென் றேயுரைத்தார்!

‘மேலை நிலத்தவர் விந்தையைக் கண்டும்நாம்
வேடிக்கைப் பார்ப்பதோ?’ என்றுரைத்தார்.



கூம்பலும் சோம்பலும் கூடாதென்றார்—வெறுங்
கூச்சலில் வண்டியும் ஓடாதென்றார்!

சாம்பல் எரியுமோ மீண்டுமென்றார்—புதுச்
சாதனை அல்லவோ வேண்டுமென்றார்!



இந்தியா சிறந்த தேசம்
    இல்லையா என்று கேட்பர்;

இந்திய நாட்டில் ஏழ்மை
    இல்லையா என்று கேட்பேன்.

இந்தியா வாழ வேண்டும்;
    இரணியன் இறந்த நேரம்


அந்தியா பகலா என்னும்
    ஆராய்ச்சி இன்றோ தேவை?

இல்லையே என்று கையை
    ஏந்துதல், எங்கள் வாழ்வு

தொல்லையே துயரே என்று
    சொல்லுதல், சிலபேர் இங்கே

கொல்லைப்பூ வாசம் வீசக்
    கூடத்தில் ஊஞ்ச லாடல்,

நல்லதா? இந்தப் போக்கு
    நாட்டுக்குத் தேவை தானா?



காட்டுக்கு முன்கா லத்தில்
கமண்டல முனிவர் தேவை

ஏட்டுக்குத் தேவை நல்ல
எழுத்தாணி; ஆனல் இன்றே

காட்டுக்குத் தேவை நல்ல
காவலே யாகும்; பாடும்


பாட்டுக்குத் தாளம் தேவை
பணத்திற்கும் திட்டம் தேவை!

எனவேதான் புதிய சட்டம்
இயற்றினேம்; பொருளா தாரத்

தனிவேதம் எழுதா விட்டால்
தாறுமா ருகும் தேசம்.

கனிபோதும் அணிற்பிள் ளைக்குக்
கயல்போதும் கொக்குக் கெல்லாம்;

மனம்'போதும்' எனச்சொல் லாதே
என்பதால் வரம்பு தேவை!



என்றுநம் நேரு சொன்னார்
இங்குவாழ் மாந்தர்க் கெல்லாம்

பொன்மொழி பொருந்தச் சொன்னார்;
பூரித்தோம் கேட்டுக் கேட்டு.

தென்மொழித் தமிழ்போல்; வீசும்
தென்றல்போல்; சிறந்த நேரு

நன்மையின் தூதர்! பேச்சு
நாயகர்! நாட்டின் தீபம்!




நாகரி கத்தின்வ ரம்பானுர்
நாலுதி சைக்கும்வ ரம்பானுர்

ஈகைய ளிப்பதில் கண்ணுனுர்
எல்லேவ குப்பதில் கண்ணுனுர்

பாகமெ னச்சம நேரானுர்
பண்பில்ப ழுத்தவர் நேரானுர்

தாகந்த விர்த்திடும் நீரானுர்
தம்முடல் வெந்தவர் நீருனுர்!



பாரினில் மேருவும் இன்றில்லை
பஃறுளி யாறும் இன்றில்லை

தாருவில் கற்பகம் இன்றில்லை
சகோட யாழும் இன்றில்லை

கோரிய சுவைதரும் காப்பியமாம்
குண்டல கேசியும் இன்றில்லை

ஓரியும் பாரியும் இன்றில்லை
உத்தமர் நேருவும் இன்றில்லை!



எனக்காகப் பெண்டு பிள்ளை
    எனக்காக வீடு வாசல்
எனக்காக உற்றார் மற்றார்
    எனினுங்கேள் என்தாய் நாடே!
உனக்கேதும் தீங்கு நேரின்
    உன்துயர் துடைக்க வேண்டித்
தனிக்காதல் மனைவி, மக்கள்
    சகலமும் துறப்பேன் கண்டாய்!

தாய்நாடே, உன்னை வேண்டித்
    தவிட்டையும் தின்பேன்! இன்பத்
தாய்நாடே, உன்னை மீட்கத்
    தணல்மீதும் நிற்பேன்! அன்புத்
தாய்நாடே, மாற்றார் நஞ்சைத்
    தரினும்யான் ஏற்பேன்! வீரத்
தாய்நாடே, உன்னைக் காக்கச்
    சாகவும் அஞ்ச மாட்டேன்!

— கவிஞர் சுரதா

